

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தென்காசி சாலையில், இராஜபாளையம் மோட்டார் வாகன ஆய்வாளர் புதிய பகுதி அலுவலகத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார் மற்றும் இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் திறந்து வைத்தனர்.



உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி வாலாஜாபாத் பேரூராட்சியில் 43 லட்சத்தில் சாய் நகர் பூங்கா அமைக்கும் பணியை பேரூராட்சி மன்ற தலைவர் எஸ் இல்லா மல்லி ஸ்ரீதர் தலைமையில்மாவட்ட கழக செயலாளர்.க. சுந்தர் எம்எல்ஏ தொடங்கி வைத்தார் உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றிய செயலாளர் பி சேகர் பேரூர் செயலாளர் என் பாண்டியன் செயல் அலுவலர் லோகநாதன் பேரூராட்சி மன்ற உறுப்பினர் ஆர் வெங்கடேசன்மற்றும் துணைத் தலைவர் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

### ஒன்றிய பா.ஜ.க. அரசை நாட்டை விட்டு விரட்டிட உழைத்திடும் முதல்வருக்கு நன்றி!

# நெல்லை கிழக்கு மாவட்டத்தில் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெற உழைத்திடுவோம்!

## மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்!

நெல்லை.நவ.17- நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன்,மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் இராதாபுரம் தொகுதி பார்வையாளர் சுரேஷ்ம ஜோகரன்,

மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணைச் செயலாளர் அம்பாசமுத்திரம் தொகுதி பார்வையாளர் சிவராஜ் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்கி உரையாற்றினர்.

நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் தமயந்தி,பொருளாளர் ஜார்ஜ் கோசல்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன்,கே.கே.சி.பிரபாகரன்,

சித்திக்,பொதுக்குழு உறுப்பினர்கள் ராமச்சந்திரன், கணேசன் அபூபக்கர், பரமசிவஅய்யப்பன், சாந்தி, கனகராஜ், ஒன்றியச் செயலாள ர்கள் பி.சி.ராஜன்,செல்வகருணாநிதி, ஜோசப்பெல்சி,சிவனுபாண்டியன் என்ற பரணி சேகர்,சுடலைக்கண்ணு, ஆரோக்கியஎட்வின்,முத்துப்பாண்டி என்ற பிரபு,முத்துக்கி ருஷ்ணன், போர்வெல் கணேசன்,நகரச் செயலாளர்கள் கணேசன் சுப்பிரமணியன் என்ற மணிசூரியன், மாநில விவசாயத் தொழிலாளர்அணி

துணைச் செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜான்ரபீந்தர்,பேரூர்க் கழகச் செயலாளர்கள் சுப்பையா,மணிஷா செல்வராஜ், கே.மணிகண்டன், டி.வானுவாமலை, அயூப்கான், கசமுத்து, வானுவாமலை,முருகையாபாண்டியன், ஜான் கென்னடி, சேது ராமலிங்கம், தமிழ்வாணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன் மாதிரியாக தமிழ்நாட்டை மாற்றி தன்னுடைய உழைப்பின் காரண மாக கடந்த 2 ஆண்டுகள் 6 மாதங்களில் தமிழகத்தில் ஏழை,எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட,மிகவும் பிற்படுத்தப் பட்ட,தாழ்த்தப் பட்ட,பழங்குடியினர் மக்கள் அனைவரும் தினந்தோறும் நாளும் ஒரு திட்டங்களைப் பெற்று பயனடைந்து வருகிறார்கள்.தலைவர் அவர்களுடைய ஆட்சியினை தங்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துகின்ற ஆட்சி என போற்றி மகிழ்கிறார்கள்.எண்ணற்ற திட்டங்களை தந்து மக்களை நாளும் காத்து வருகின்ற முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இம் மாவட்டச் செயற்குழுக் கூட்டம் நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும்,பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்!

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் அன்று சொல்வதை செய்வோம்!செய்வதை சொல்வோம்! என்ற கலைஞர் அவர்களின் வழி நின்று கலைஞர் அவர்களால் உழைப்பு! உழைப்பு! உழைப்பு! என பாராட்டப்பட்ட நம் திராவிட மாடல் முதலமைச்சர். கழகத் தலைவர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.இதன் மூலம் 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன் பெற்றுள்ளனர்.மேலும் தகுந்த காரணங்கள் இன்றி நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களை மீண்டும் விண்ணப்பிக்கலாம் என்றும் அதனை கனிவுடன் பரிசீலனை செய்து தகுதியுள்ள அனைத்து மகளிர் அனைவருக்கும் உரிமைத் தொகை கிடைக்கும் என்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல் அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் சொல்வதை தான் செய்வோம்! செய்வதைதான் சொல்வோம் என்று முத்தமிழறிஞர் கலைஞருடைய தாரக மந்திரத்துக்கு ஏற்ப இந்த மாதத்துக்கான மகளிர் உரிமைத் தொகையை முன்கூட்டியே வழங்கி மகளிர் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளார். மகளிர் அனைவரும் தங்களுக்கான ஆட்சி தலைவர் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சி என தலைவரை போற்றி புகழ்ந்து மகிழ்கிறார்கள்.சிறப்புமிக்க இந்த திட்டத்தை தந்த முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும், வாழ்த்துகளையும்,பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களுடைய உழைப்பால் தமிழ்நாட்டில் பலதரப்பட்ட மக்கள் தினமும் ஒரு நலத்திட்டங்களைப் பெற்று வருகிறார்கள்.கழக ஆட்சியினை தமக்கான ஆட்சி என போற்றி மகிழ்கிறார்கள். மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன்மாதிரி யாக மகளிர்க்கு கட்டணம் இல்லா பேருந்து பயணத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48,கலைஞர் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட திட்டங்களை தந்து தமிழகத்தை இந்தியாவின் நம்பர் 1 மாநிலமாக மாற்றிக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும்,பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

### மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

திராவிட மாடல் ஆட்சி நாயகர் - முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலோடு நெல்லை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சிக்கு வருகை தந்து நிகழ்ச்சியை சிறப்பித்த கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்,நிகழ்ச்சியை வெற்றி பெற மாவட்டக் கழகத்திற்கு உறுதுணையாக இருந்த அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும், ஒன்றிய, நகர, பேரூர்,கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் அனைவருக்கும் நன்றியையும்,பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் தான் ஆட்சி செய்த போது ஏழை,எளிய,பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள்,மகளிர்,முதியோர், பள்ளி கல்லூரிகளில் பயிலும் மாணவ -மாணவியர் இளைஞர்களுக்கு நாளும் நலத்திட்டங்களை தந்து ஆட்சி செய்து வந்த நமது தலைவர் செம்மொழிக் காவலர் என்றும் கலைஞர் என போற்றப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு பொதுக் கூட்டம், கருத்தரங்கம்,கவிதை போட்டி, கண்காட்சிகளை நடத்தியும், முதலமைச்சர் திராவிட மாடல் ஆட்சியில் நலத் திட்டங்களை துண்டுப் பிரசுரம் மூலம் பிரச்சாரம் நடத்திட மாவட்டச் செயற்குழுக் கூட்டம் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. தொடர்ந்து மாவட்டம் முழுவதும் கழக நிர்வாகிகள் பங்கேற்று கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவது என்றும்.

### மற்ற மாநிலங்கள் பின்பற்றும் திட்டங்கள்!

முதலமைச்சர் கழகத் தலைவர் அவருடைய உழைப்பினால் தொழில் துறையில் முதன்மை பொருளாதார ரீதியாக அதிவேக முன்னேற்றம், கல்வி இந்தியாவில் முதன்மை என தமிழ்நாட்டின் முன்னேற்றம் இருந்து வருகிறது.தமிழ்நாட்டின் வளர்ச்சியே மக்களின் வளர்ச்சி தனது தமிழ்நாட்டின் வளர்ச்சியும்,மக்களின் வளர்ச்சியுமே தன்னுடைய மகிழ்ச்சி என எண்ணி உழைத்து வருகின்ற நம் தலைவர் அவர்கள் உழைப்பால் தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகளில் 90 சதவீதம் நிறைவேற்றியுள்ளார். அவர்கள் இரவு,பகல் பாராது, கண் துஞ்சாது உழைப்பினால் தமிழக மக்கள் அனைவரும் முதலமைச்சர் அவர்களை எண்ணி போற்றி புகழ்கிறார்கள்.மற்ற மாநிலங்களில் உள்ள மக்கள் எல்லாம் நமக்கும் இது போன்ற முதலமைச்சர் கிடைக்கமாட்டாரா என்று ஏங்கி தவிக்கிறார்கள்.தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படுகின்ற மக்கள் நலத்திட்டங்களை பார்த்து மற்ற மாநிலங்களும் தங்கள் மாநிலங்களில் நிறைவேற்றுவதற்காக முயன்று வருகிறார்கள்.இது போன்ற மாநிலங்களுக்கு எல்லாம் உதாரணமாக தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகின்ற முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவிப்பது என்றும்.

### 'நீட் விலக்கு நமது இலக்கு!'

நாற்பதும் நமதே,நாடாளுமன்றமும் நமதே என்று உருவாக்கும் வகையில் இந்தியா கூட்டணி வெல்ல நாளும் உழைக்கும் கழகத் தலைவர் அவர்களுடைய தலைமையில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளில் நாடாளுமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று ஒன்றிய பா.ஜ.க. அரசை நாட்டை விட்டு விரட்டிட உழைத்து வரும் முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டுகளையும்,வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.இந்தியா கூட்டணிக்கும் வாழ்த்துகளை, பாராட்டுகளை தெரிவிப்பது என்றும் நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் வெற்றிபெற உழைப்பது என்றும்

நீட்விலக்கு நமது இலக்கு என்ற மாபெரும் மக்கள் அறப்புரட்சியை ஏற்படுத்தி 50 லட்சம் மக்களிடம் கையெழுத்து வாங்கி நீட்டுக்கு எதிராக தனது வன்மையான எதிர்ப்பை கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுடைய வழிநின்று போராட்ட திட்டங்களை தீட்டி வருகிறார்.இந்த நீட் தேர்வால் அரியலூர் அனிதாவை தொடங்கி குரோம் பேட்டை மாணவர் ஜெகதீஸ்வரன் மட்டும் அல்லாமல் அவருடைய தந்தையையும் சேர்த்து பலி வாங்கி உள்ளது. நீட் தேர்வால் ஏழை,எளிய கிராமப்புற மாணவ செல்வங்களின் மருத்துவக் கனவு சிதைந்துவிட்டது.இவ்வாறு பிரச்சினைகள் நடக்கும் போது முதலமைச்சர் அவர்கள் நீட் தேர்வுக்கு ஆரம்பகாலத்தில் இருந்தே தன்னுடைய எதிர்ப்பினை பதிவு செய்துள்ளார். மேலும் நீட் தேர்வு ஒழிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.எந்த நீட்டை எதிர்த்தோமோ அந்த நீட்டுக்கான பலன் ஜீரோ என்பதை ஒன்றிய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. தற்போது முதுநிலை மருத்துவ படிப்பில் சேர்வதற்கான நீட் தேர்வுக்கானமதிப்பெண்ஜீரோ பெற்றாலே போதும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. அப்படி என்றால் நீட் தேர்வு ஒரு கண்துடைப்பு நாடகமென தெளிவாக தெரிகிறது. இதற்கு காரணமாக உள்ள ஒன்றிய அரசை தொடர்ந்து கண்டித்து வருகின்ற முதலமைச்சர் அவர்களுக்கும்,கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களுக்கும் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவிப்பது என்றும்.

### பாகமுகவர்கள் குழு உறுப்பினர்கள்!

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் வருகின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 என்ற இலக்கை அடைவதற்கு பாகமுகவர்கள் கூட்டம் இராமநாதபுரத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அதனை தொடர்ந்து நெல்லை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர,பேரூர் பகுதிகளில் பாகமுகவர்கள் குழு சரி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.(BLC) அதனை தொடர்ந்து தலைமைக் கழகம் மூலம் வாக்காளர்கள் சரிபார்ப்பு பணியை செய்திட ஒன்றிய, நகர,பேரூர், கிளை பகுதிகளில் உள்ள பாகங்களில் மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.அந்தப் பணியினை வருகின்ற 22.11.23 நாட்களுக்குள் முழுமையாக சரி பார்த்து தலைமைக் கழகத்திற்கு அனுப்பிடும் வகையில் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் முன்னெடுப்பில் பாக முகவர்கள் குழு உறுப்பினர்கள் பணியாற்றிட வேண்டும் என்றும்.

முதலமைச்சர் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சியில் தலைவர் அவர்களுடைய தலைமையில் வேளாண்துறை வளர்ச்சி,வேளாண்மைக்கு 2 லட்சம் பேருக்கு இலவச மின்சார இணைப்பு,விவசாயக் கடன் தள்ளுபடி, பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம்,கல்லூரி மாணவியருக்கு மாதம் 1000ம் உதவித்தொகை வழங்குவதோடு மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கு அடிப்படை தேவையான குடிநீர், போக்குவரத்துக்கு ஏற்ற சாலை வசதிகள்,தரமான சுகாதார வசதி, மிகச்சிறந்த மருத்துவமனைகள், திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு, பள்ளிக்கல்வித்துறையில் வளர்ச்சி மற்றும் அனைத்து வழித்தடங்களுக்கும் போக்குவரத்து வசதிகள்,படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என பல்வேறு திட்டங்கள் கிடைத்து வருகிறது.இதன் காரணமாக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக உள்ளனர்.

### வாக்காளர் சிறப்பு முகாம்!

மேலும் நெல்லை மாவட்டத்தில் அனைத்து தரப்பு மக்களுக்கும் வாழ்வாதாரத்துக்குத் தேவையான அடிப்படை வசதிகளான தரமான தார்ச்சாலை வசதி,தெருவிளக்கு வசதி, குடிநீர்வசதி, மருத்துவவசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தந்து திருநெல்வேலி மாவட்ட மக்களின் நலனை பாதுகாத்து வருகின்ற திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவிப்பது என்றும்.

01.01.2024 தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 27.10.23 அன்று வெளியிட்டுள்ளது. அதில் பெயர்களை சேர்த்திட,நீக்கிட, திருத்தங்கள் மேற்கொள்ள 27.10.23 முதல் வரும் 09.12.23 வரை மனு செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதனுடைய சிறப்பு முகாம்கள் 04.11.23 சனி,05.11.23 ஞாயிறு நடைபெற்றது. அதில் ஏற்கனவே தலைமைக் கழகம் மற்றும் மாவட்ட கழகத்தின் வேண்டுகோளின்படி கழக நிர்வாகிகள் சிறப்பாக பணியாற்றியுள்ளார்கள்.அதனை தொடர்ச்சியாக வருகின்ற 25.11.23 சனி,26.11.23 ஞாயிறு ஆகிய தினங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

இந்த நாட்களிலும் விடுபட்ட வாக்காளர்களும்,இடம் மாறிய வாக்காளர்களும் 0101 24 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்திசெய்து அந்தந்த பகுதிகளில் ஒப்படைக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் இதுவரை இடம் பெறாத வாக்காளர்களின் பெயர்களையும், புதிதாக குடி பெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும்,வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும் தொகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போது உள்ள பட்டியலிலிருந்து நீக்கவும் உரிய படிவங்களை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் ஒப்படைத்து முழுமையாக பணியினை மேற்கொள்ள வேண்டும். இந்த வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி நடைபெற உள்ள நாட்களில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள்,உதவி பார்வையாளர்கள்,ஒன்றிய,நகர,பேரூர் கழகச் செயலாளர்கள்,வார்டு, கிளைக் கழகச் செயலாளர்,வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA 2)மற்றும் வாக்குச்சாவடிநிலை உறுப்பினர்கள் (BLC) மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர் அணிகளின் நிர்வாகிகள் ஆகியோர் வாக்காளர் சேர்த்தல்,நீக்கல் பணிகளை மேற்கொண்டு அது குறித்த விவரங்களை மாவட்டக் கழகத்திற்கு கடிதம் மூலம் தகவல் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### நல வாரியத்தை துவக்கி

# தொழிலாளர்களின் குடும்பங்களைக் காத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்!

## மு.சண்முகம் எம்.பி. பேட்டி!

தஞ்சாவூர் நவ. 17. அமைப்புச் சாரா தொழிலாளிகள் நலவாரியத்தை உருவாக்கி, திமுக எப்போதெல்லாம் ஆட்சியில் உள்ளதோ அப்போதெல்லாம் புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்து தொழிலாளர்களின் குடும்பங்களை காத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என தொ.மு.ச. பேரவையின் அகில இந்திய பொதுச்செயலாளர் சண்முகம் எம்.பி. பெருமிதம் தெரிவித்தார்.

தொ.மு.ச.பேரவையின் உட்பிரிவுகளின் ஒன்றான , தமிழ்நாடு மோட்டார் வாகன முன்னேற்ற சங்கத்தின் உறுப்பினர் , ஓட்டுநர் விஜய் என்ற இளைஞர் அண்மையில் சாலை விபத்தில் மரணமடைந்த நிலையில்,அவரது மனைவி திவ்யாவிடம் அரசின் உதவித்தொகை 2 லட்சத்தை தொ. மு. ச. பேரவையின் அகில இந்திய பொதுச்செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் சண்முகம் இன்று வழங்கினார்... தஞ்சை மத்திய மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது கணவரை இழந்த திருமதி. திவ்யா விற்க்கு மாநகராட்சியில் தற்காலிக பணி வழங்கும் வகையில், மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன் பணி ஆணையையும் இன்று வழங்கினார்.

இது குறித்து பேட்டி அளித்த தொ.மு.ச. பேரவையின் அகில இந்திய பொதுச்செயலாளர் சண்முகம் எம்.பி.

முத்தமிழ் அறிஞர் கலைஞரால் உருவாக்கப்பட்ட அமைப்புச் சாரா தொழிலாளர் நல வாரியத்தால் பல லட்சக்கணக்கானவர்கள் நிவாரண உதவிகளை பெற்றுள்ளனர். நல வாரியத்தை துவக்கி தொழிலாளர்களின் குடும்பங்களை காத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்றார்.

இந்நிகழ்வில் தஞ்சை மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், கரத்தைப் பகுதி திமுக செயலாளர் கார்த்திகேயன், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் செயலாளர் சேவியர், பொதுமக்களுக்கு உறுப்பினர் தியாகராஜன், மாவட்ட தலைவர் ராஜேந்திரன் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர், மாவட்ட செயலாளர் விஜயகுமார், நிர்வாகிகள் சாக்ரட்டீஸ், லாரன்ஸ், காதர் உசேன் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

### வட்டச் செயலாளர் பி. எஸ். சந்துரு தலைமையில்

# மாதவரம் 23 வது வட்டம் புழல் பகுதியில் நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கம்!

## புழல் எம். நாராயணன் துவக்கி வைத்தார்

சென்னை, நவ. 17 - இளைஞர் நலன் விளையாட்டு துறை மற்றும் சிறப்பு செயலாகத் திட்டத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் தமிழ்நாடு முழுவதும் நீட் தேர்வு ரத்து செய்யக்கோரி, குடியரசு தலைவருக்கு அனுப்பு வகையில் 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து என்கின்ற இலக்கோடு மாபெரும் கையெழுத்து இயக்கம் துவங்கப்பட்டுள்ளது.

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 23 வது வட்ட திமுக சார்பில், புழல் பகுதியில் அமைந்துள்ள காந்தி பிரதான சாலையில், வட்டச் செயலாளர் பி. எஸ். சந்துரு தலைமையில், மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

இந்த கையெழுத்து பெரும் நிகழ்ச்சியை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு துவக்கி வைத்தார். மேலும் நீட் தேர்வால் மாணவர்கள் எவ்வாறெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை விளக்கி துண்டு பிரசுரங்க ளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சிகளில் பொதுமக்கள், மாணவர்கள், பெற்றோர்கள், இளைஞர்கள், வாகன ஓட்டிகள் என்று பெரும்பாலானவர்கள் தானாகவே முன்வந்து கையெழுத்தை பதிவு செய்து தங்களை எதிர்ப்பை தெரிவித்தார்கள்.

நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் து. எழில் குமார், டி ராஜாராம், சொ. சரவணன், மேக்சிலா உதய குமார், டி. நெல்சன் ராஜ், க.ந.க. சைமன், ரவி,முத்து வேல், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் பீர்முகமது, பாக முகவர்கள் ராஜா, நடராஜன், உதயகுமார், குழந்தைசாமி ,ஜே. கே. ஹரி, பரணிதரன், தங்கவேல், தீபக், அனுராக், பவா, ஜெகன், மகி, விமல் இளைஞர்கள் மாணவர்கள் என கழகத்தினர் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையம் முன்னாள் ஒன்றிய கழக செயலாளரும். ஒன்றியக் குழு தலைவருமான ஆசைதம்பி அவர்கள் இயற்கை எய்தினார். இதையொட்டி அன்னாரின் உடலுக்கு சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர். இரா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.




முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்று தென்காசி வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் வைத்து தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ முன்னிலையில் குருவிகுளம் ஒன்றியத்தைச் சேர்ந்த ஓ.பி.எஸ். அணியினர் மூர்த்தி, சரண் செல்வம், கார்த்தி உள்பட 50க்கும் மேற்பட்டோர் அந்த அணியிலிருந்து விலகி கழகத்தில் இணைந்தனர். நிகழ்வில் மேலநீலித நல்லூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பெரியதுரை, நகர துணைச் செயலாளர் சுப்புத்தாய், முத்துக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் முகேஷ் உள்பட பலர் உள்ளனர்.